| சாட்சி : PW2, பெரியசாமி | EP.No.33/20 in OS.No.7/14 | 12.08.2024 |
|---|---|---|

குறுக்கு விசாரணை

நான் ஹோட்டல் வைத்து நடத்திவருகிறேன். நான் திருச்சி, சேலம் ரோட்டில், திருவாசியில் ராஜேந்திரன் இடத்தில் வைத்து ஹோட்டல் நடத்தி வருகிறேன். ராஜேந்திரன் எனக்கு உறவினரா என்றால் மகேந்திரனின் மாமா ராஜேந்திரன் ஆவார். எனக்கு எதிர்மனுதாரர்களை தெரியாது. சம்பவம் நடந்த சமயத்தில் நான் திருச்சி – சேலம் மெயின் ரோட்டில் இருந்தேன். அந்த சமயத்தில் ராஜேந்திரன் வயலில் டிராக்டர் உழவு ஓட்டி கொண்டிருந்தது. நான் மகேந்திரனுக்கு போன் செய்து வயலில் உழவு ஓட்ட சொன்னீர்களா என்று கேட்ட போது அவர் இல்லை கூறினார். போன் பேசிய 3/4 மணி நேரத்திற்குள் மகேந்திரன் தனது வயலுக்கு வந்துவிட்டார். வயலில் உழவு ஓட்டிய டிராக்டரின் பதிவு எண், அதன் ஓட்டுனரை பார்த்தேனா என்றால் இல்லை. அந்த இடத்தில் யார் இருந்தார்கள் என்றால் சேரன் மற்றும் அவரது தம்பி, அம்மா ஆகியோர் இருந்தனர், அவர்களின் பெயர் எனக்கு தெரியாது. சுமார் 1/2 மணி நேரம் வயலில் டிராக்டர் உழவு ஓட்டியது. மகேந்திரன் வந்த பிறகு டிராக்டர் நிறுத்தப்பட்டது என்றால் அவர் பேப்பரை காட்டினார் அதன் பிறகு நிறுத்தப்பட்டது. பேப்பரை சேரன் கிழித்துவிட்டார். நான் சொல்வது போல் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் மனுதாரருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர்களை தெரியாது என்று கூறிவிட்டு, தற்போது சேரனை மட்டும் தெரியும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.